Date: 22.11.21.　　　　　　　C.C.No. 548 /2009

அ.சா.1 ராமசாமி என்ற கண்ணன் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

இந்த புகாரை நான்தான் கொடுத்தேன் என்றால் சரிதான். எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது என்னிடம் வாங்கப்பட்டது. நான் என் புகாரில் என் ஊரிலிருந்து தென்னங்கன்று வயலுக்கு சென்றுகொண்டிருந்தபோது என்று சொல்லியிருக்கிறேன். என் ஊருக்கும மேற்படி இடத்திற்கு இடையே எவ்வளவு தொலைவு என்றால் முக்கால் கிலோமீட்டர். நான் எத்தனை மணிக்கு முக்கால் கி.மீ.-ஐ கடந்தேன் என்றால் கால்மணிநேரத்தில். நான் எந்த திசையிலிருந்து எந்த திசைநோக்கி சென்றேன் என்று போலீசாரிடம் சொல்லியிருக்கேனா என்றால் போலீசார் அதைபற்றி என்னிடம் கேட்கவில்லை நானும் சொல்லவில்ல. எதிரிகள் எந்த திசையிலிருந்து எந்த திசைநோக்கி காரில் வந்தார்கள் என்று பகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எதிரிகளை பார்த்தவுடனே தப்பித்துச்செல்வதற்கு யாரையாவது உதவிக்கு கூப்பிட்டேனா என்றால் என்னுடன் இருந்த ராஜேந்திரனை அழைத்தேன். கூட வந்தவரை நான் எப்படி அழைத்தேுன் என்றால் என்னுடன் வந்தார் நான் காப்பாற்று என்று அவரிடம்தான் சொன்னேன். மேற்படி விவரத்தை, புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை தற்போதுதான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பின்பு ஒரு போக்கு வண்டி வந்ததாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தைவிட்டு எதிரிகள் எந்த பக்கமாக ஓடிச்சென்றார்கள் என்றால் நான் மயக்மாக இருந்தேன், எதிரிகளின் வீடு நோக்கி செல்லும் திசையை நோக்கி சென்றார்கள் என்று சொன்னேன். மேற்படி விவரத்தை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை தற்போதுதான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்மீது குற்ற எண்கள் 368-08, 364-09, 713-08, 308-08, 147-11, 698-11, மற்றும் பி.ஆர்.சி. கொலை வழக்குகள் என்மீது நிலுவையில் உள்ளது என்றால் எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளது. எஸ்.எஸி சட்டத்தின்கீழும், மோசடி வழக்குகளும், கொலை முயற்சி மற்றும் கொலை வழக்கும் எனமீது நிலுவைில் உள்ளது என்றால் எதிரிகளின் குடும்பத்தினர் தூண்டுதலின்பேரில் என்மீது பல்வேறு வழக்குகள் கொடுக்கப்பட்டிருக்கலாம். நான் காயம்பட்டவுடன் மயக்கமாகிவிட்டேன் பின்பு என்ன நடந்தது என்றால்

மருத்துவமனைக்கு வந்தோம். மருத்துவமனைக்கு வரும்வரை என்ன நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். மயக்கமடைந்ததிலிருந்து மருத்துவமனை வரும்வரை எவ்வளவு நேரம் ஆனது என்றால் 45 நிமிடங்கள் இருக்கும், நான் போலீசாருக்கு போன் செய்து நானே அழைத்தபின்பு அப்போதைய ஆய்வாளர் என்னை மருத்துவமனையில் அனுமதித்தார். ஆய்வளார்தான் என்னை மருத்துவமனையில் சேர்த்தனர் என்றால் என் உறவினர்களும் ஆய்வாளரும் சேர்ந்து மருத்துவமனையில் சேர்த்தனர். போலீசாருடன் சேர்த்து எத்தனைபேர் மருத்துவமனைக்கு என்னுடன் வந்தனர் என்றால் போலீசார் வேறு ஒரு வாகனத்திலும், நாங்கள் அம்பாசிடர் காரிலும் வந்தோம். என்னுடன் அம்பாசிடர் வந்தவர்கள் பெயர் தெரியுமா என்றால் என் மகன் ஆதி, மனைவி, மைத்துனர் வழக்கறிஞர் பிரசாத் ஆகியோர்கள் வந்தோம். மேற்படி விசயங்களை என் புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் போலீசார் கேட்கவில்லை, நீங்கள் கேட்டதால் தற்போது சொல்கிறேன். 2-வது எதிரி கார்த்திக், 8-வது எதிரி அமுதா ஆகியோர்கள் மேலூரில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான், விவசாய நிலம் கொட்டகுடியில் இருக்கிறது. நான் 1-வது எதிரிமீது சி.சி.. 232-09 என்ற வழக்கு ஒன்றை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் போலீசார் வாக்குமூலத்தில் மிகைப்படுத்தி சொல்லிவிட்டேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. அதேபோல்தான் இந்த வழக்கிலும் மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேலூரில் மருத்துவரிடம் சிகிச்சையில் சேரும்போது சுயநினைவுடன்தான் இருந்தேன் என்றாலும், எத்தனைபேர் தாக்கினார்கள் என்று நான்தான் மருத்துவரிடம் தகவல் சொன்னேன் என்றாலும் சரிதான். எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும், நானே போதையில் கீழே விழுந்துவிட்டு என் மகனை சாட்சியாக சேர்த்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேளன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றாலும், எதிரிகள்மீது பொய்யாக அடிக்கடி வழக்கு கொடுத்து வருகிறேன என்றாலும் சரியல்ல.

Date: 22.11.21. C.C.No. 548 /2009

அ.சா.2 ஆதி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். சம்பவத்தன்று நான் எங்கு சென்றிருந்தேன் என்றால் பள்ளிக்கூடம் சென்றுவிட்டு 04.30 மணிக்கு வீடு திரும்பி மந்தைக்கோயிலில் இருந்தேன். என் அப்பாவுக்கு காயம்பட்டது எனக்கு எப்படி தெரியம என்றால் ஊர்க்காரர்கள் சொன்னார்கள், யார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் நிறையபேர் இருந்தார்கள் அதனால் என்னால் குறிப்பிட்டு தெரியாது. என்மீதும், என் அப்பாமீதும் நிறைய வழக்குகள் குற்ற எண்கள். 368-08, 364-09, 713-08, 308-08, 147-11, 698-11, மற்றும் பி.ஆர்.சி. கொலை வழக்குகள் என்மீது நிலுவையில் உள்ளது என்றால் எதிலும் நான் ஈடுபடவில்லை. என் அப்பாவிற்கு சம்பவத்தன்று காயம்பட்டது எனக்கு வீட்டிற்கு செல்லும்வத்தை தெரியாது என்றால் சரிதான், வீட்டிற்கு சென்றபின்புதான் தெரியும். என் அப்பாவை மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் அழைத்து வந்தோம் என்றால் காரில் அழைத்து வந்தோம். யாரெல்லாம் வந்தோம் என்றால், நான் ராஜேந்திரன், ரவி மற்றும் என் அம்மா ஆகியோர்கள் வந்தோம். சம்பவதினம் சனிக்கிழமை என்பதால் அன்று பள்ளி விடுமுறை என்றால் நான் தென்றல் இன்ஸ்டியூட்டில் படித்து வந்தேன். தென்றல் டுட்டோரியலில் படிப்பதால் யூனிபார்ம் கிடையாது என்றால் என் அப்பா எனக்கு சீருடை எடுத்து கொடுத்திருந்ததால் நான் சீருடையுடன் சென்றேன். நான் சீருடையில் சென்றதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை எப்பொழுது விசாரித்தனர் என்றால் நான் பெரியாஸ்பதிரி சென்ற மறுநாள் காலையில் விசாரித்தனர். சம்பவத்தின்போது நான் வீட்டிற்கு சென்றபோது வீட்டில் எத்தனைபேர் இருந்தார்கள் என்றால் நான் என் அப்பாவை காயத்துடன் பார்த்ததால் நான் சரியாக பார்க்கவில்லை. நான் போதையில் இருந்ததால் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு இந்த சம்பவத்தில் எந்த எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்றால் வயிற்றிலும், கைவிரலிலும் காயம் எற்பட்டிருந்தது. எனக்கும் மற்றும் என் அப்பாவிற்கும் ஏற்பட்ட காயத்தழும்புகள் பல்வேறு வழக்குகளில் எங்களுக்கு எற்பட்டது என்றால் 2008ம் ஆண்டிற்கு முன்பாக எனக்கும் என் அப்பாவிற்கும் எந்தவித காயங்களும் இல்லை. நான் இந்த வழக்கில் என் அப்பாவிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.